# OS. No. 68/2019 நாள் 19.07.2022

**வா.சா.1 சாட்சி முருகேசன் மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய மனைவி பெயர் அலமேலு, மாமியார் பெயர் ஜெயலெட்சுமி, மாமனார் பெயர் கருப்பையன். கருப்பையன் இறந்த தேதி தெரியாது, அவர் 2005 ஆம் ஆண்டில் இறந்துவிட்டார். வா.சா.ஆ. 8 கிரயபத்திரம் என் மனைவியும் மாமியாரும் எனக்கு எழுதிகொடுத்தவை. அந்த சொத்து என் மாமியார் வீட்டு சொத்து என்றால் சரிதான். கிரய பத்திரம் எழுதப்பட்ட சமயம் நான் வீரமுண்டான்குடிகாட்டில் இருந்தேன். அந்த பத்திரம் எழுதப்படும்போது என் மாமனார் உயிருடன் இல்லை. என் மாமனாருக்கு என் மனைவி ஒரே மகள். என் மாமியார் வீட்டு சொத்துக்களை நான் பராமரித்தேன் என்றும் கடன் வாங்குவதற்காகவும் சொத்துக்களை நிர்வாகம் செய்வதற்காகவும் அந்த கிரய பத்திரம் என் பெயரில் ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த கிரய பத்திரத்தில் கண்ட சொத்துக்கான சிட்டா தான் வா.சா.ஆ.10 ஆவணமாகும். என் மனைவிக்கு என் மாமனாரும் மாமியாரும் எழுதி வைத்த செட்டில்மெண்ட் சொத்துதான் வா.சா.ஆ.9. அந்த சொத்துகளுக்குரிய பட்டாதான் வா.சா.ஆ.11. 29.08.2008 ஆம் தேதியில் கடன் கொடுப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு கடன் கேட்டார், அந்த சமயத்தில் என்னிடம் பணம் இருந்தது அவ்வளவு தொகை என்பதால் தாமதமாக கொடுத்தேன். ஜாமீனுக்கு ஆள் கூட்டி வர சொல்லி சொன்னதால் தாமதமானது. கடனுக்கு உத்திரவாதமாக வேறு பத்திரம் எதுவும் வாங்கவில்லை. என்மகன் பிறந்த தேதி தெரியாது அவர் 1995 ஆம் ஆண்டில் பிறந்தார், என் மகனுக்கு 27 வயது. என் மகனுக்கு திருமணம் ஆகவில்லை. என் மகனுக்கு என் மாமனார், மாமியார் செட்டில்மெண்ட் எழுதி வைத்திருக்கிறார்கள். அந்த பத்திரத்தின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய வழக்கறிஞரிடம் கொடுத்திருக்கிறேன். அந்த பத்திரத்தை பார்த்தால் தான் என் மகனுக்கு எந்தெந்த சொத்துக்கள் செட்டில்மெண்ட் எழுதிவைக்கப்பட்டது என்று தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.12 என் மகன், மனைவி மற்றும் பாத்திமா என்பவர் மூவரும் சேர்ந்து எழுதி கொடுத்த கிரய பத்திரமாகும். அந்த கிரய பத்திரத்தின் கிரய சொத்து 4 ஏக்கர், 4 ஏக்கரும் ஒரே புல எண்ணில் அடங்கியுள்ளது. என் மகனுக்கு கொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தை பார்த்தால் தான் அந்த புல எண்ணில் என் மகனுக்கு எவ்வளவு பாத்தியம் என்பது தெரிய வரும் என்றால்

சரிதான். அந்த கிரய பத்திரத்தில் சொத்தை விற்பதற்கான காரணம் குடும்ப செலவு என்று சொல்லபட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 13 இல் இவ்வழக்கு தாக்கல் செய்த பின் 3 வருடங்கள் கழித்து ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த கிரய பத்திரத்தின் கிரயத்தொகை ரூ 53, 800/- என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எனக்கு வசதி உள்ளது என்பதை காட்டகூடிய ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. எனக்கு மூன்று மகள்கள், அதில் இருவருக்கும் 2018 ஆம் ஆண்டில் திருமணமானது. திருமண தேதி ஞாபகமில்லை. எனக்கு வசதியோ, வருமானமோ இல்லாததால் தான் வா.சா.ஆ.9 இல் கிடைத்த சொத்துக்களை விற்று குடும்ப செலவு செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கடந்த 30 ஆண்டுகளாக மூக்கப்பஉடையான் பள்ளத்தில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். ஆவணங்கள் மட்டும் வீரமுண்டான்குடிகாட்டில் வைத்திருக்கிறேன் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு பள்ளியக்கிரகாரம் விலாசத்திற்கு அனுப்பி அதை அவர்கள் பெற்று கொண்டார்கள் என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பு சார்வானதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு காரணம் எதுவும் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பிலோ, வழக்குரையிலோ பிரதிவாதி அவரது கடனை தீர்ப்பதற்காக என்னிடம் கடன் கேட்டதாக நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கு அரைகுறையாக படிக்க தெரியும். புரோ நோட்டிலும் பிரதிவாதியின் குடும்ப கடனை அடைப்பதற்காக எழுதப்பட்டதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. கொசுவபட்டி என்ற ஊர் எங்கிருக்கிறது என்று தெரியாது. முதுகுளத்திற்கு மூக்கப்பஉடையான் பள்ளத்திற்கும் 2 கி.மீ தூரம். மூக்கப்பஉடையான் பள்ளத்திற்கும் குருங்குளத்திற்கும் 4 கி.மீ தூரம். நான் கடன் கொடுக்கும் போது மதியம் 2 மணி இருக்கும், புரோநோட்டு எழுதும்போது மணி 4 இருக்கும். புரோநோட்டு எழுதுபவரையும், சாட்சிகளையும் 4 மணிக்குதான் அழைத்து வந்தார்கள். பணம் கொடுத்த சமயம் மூக்கப்பஉடையான் பள்ளத்தை சேர்ந்த யாரும் இல்லை. மூக்கப்பஉடையான் பள்ளத்தில் ஒரு 50, 60 குடும்பம் இருக்கும். அந்த ஊரில் எனக்கு உறவினர் உள்ளனர். நான் பிரதிவாதிகளுக்கு கடன் கொடுக்கவில்லை என்றும், கடனுறுதி சீட்டு எழுதி தரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் மகளின் திருமண தேதி மற்றும் மகனின் பிறந்ததேதி சொல்லதெரியாத நான் சொல்லி கொடுத்த படி புரோநோட்டு எழுதிய தேதியை சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியை யார் என்றே

எனக்கு தெரியாது என்றும், மோசடியாக புரோநோட்டை தயாரித்து வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு வருமானம் இல்லாத காரணத்தால் தான் மாமியார் வீட்டில் கொடுத்த சொத்தை விற்றிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்கள் நான் வசதியானவர் என்பதை காண்பிக்க கூடிய ஆவணங்கள் அல்ல என்றும் அவை வழக்கிற்கு தேவையற்ற ஆவணங்கள் என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்காது என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- A. மலர்விழி)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.